C.C.No. 05/2023
நாள்: 10.10.2025
நேரம்: 11.50

P.W– 7 : செல்வராஜ், த/பெ. கோபால்

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

அ.சா.1 எனக்கு என்ன உறவுமுறை என்றால் சகலை. வழக்கு சம்பவமானது 11.10.2022 ம் தேதி நானும், திருமுருகன் என்பவரும் ஊரில் உள்ள கண்மாய்க்கு குளிக்க சென்றபோது நடைபெற்றது என்றால் சரிதான். நான் குளிக்க சென்ற சமயம் தான் போலிசார் எங்களை அழைத்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எங்களை அழைத்தபோது, அங்கு என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அங்கு சென்றபோது போலிசார் எழுதி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் எழுதி கொண்டிருக்கும் போது நாங்கள் வரைபடம் வரைந்துள்ளோம், அதில் சாட்சியாக கையொப்பம் செய்ய வேண்டும் என்று சொன்னதின் அடிப்படையில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பார்வை மகஜரை யார், எப்போது தயார் செய்தார்கள், என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் அதில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், அதை நான் படித்து பார்க்கவில்லை என்றாலும் சரிதான், நான் கையெழுத்து மட்டும் செய்தேன்.

நான் கையெழுத்து செய்தபோது அ.சா.1 குமாரவேல் அங்கு தான் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். கையெழுத்து பெற்ற பின், மகஜரை போலிசார் எங்கு எடுத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மகஜரில் கையொப்பம் செய்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் போலிசாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சாட்சியம் அளிக்க இன்று அ.சா.1, தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 யை எனக்கு தெரியும், அவருக்கு ஆதரவாக தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2025.10.10 12:26:38 +0530

C.C.No. 05/2023
நாள்: 10.10.2025
நேரம்: 12.00

P.W– 8 : திருமுருகன், த/பெ. ஆறுமுகம்

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

எனக்கு அ.சா.1 என்ன உறவுமுறை என்றால் மைத்துனர் முறை வேண்டும், எனக்கும் அவருக்கும் பிடிக்காது. நான் ஊராட்சியில் ஒன்றிய கவுன்சிலராக உள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 முன்னாள் ஊர்த்தலைவர் என்றால் சரிதான். நான் கான்ட்ராக்டர் என்றால் சரிதான். அ.சா.1, அவரது தம்பியின் ஒப்பந்ததாரர் வேலையை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். அவர் பரிச்சயமானவரா என்றால் பரிச்சயமானவர். 11.10.2022ம் தேதி நானும் செல்வராஜூம் சேர்ந்து காலை 11.00 மணியளவில் கண்மாய்க்கு குளிக்க சென்றோம் என்றால் காலை 10.00, 10.30 மணி இருக்கும். நான் குளிக்க சென்றபோது தான் போலிசார் என்னை அழைத்தார்கள் என்றால் சரிதான். என்னை அழைத்தபோது அங்கு என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சென்றபோது போலிசார் எழுதி கொண்டிருந்தார்களா என்றால் இல்லை, போலிசார் என் முன்னிலையில் தான் எழுதினார்கள். போலிசார் என்ன வரைபடம் வரைந்து எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்த அதிகாரியின் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது, வரைபடம் வரைந்தது தெரியும். மகஜரை படித்து பார்த்தேனா என்றால் ஓரளவிற்கு படித்து பார்த்தேன். மகஜரில் சம்பவ இடம் என எதை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அ.சா.1ன் வீட்டின் வாசல் முன்பாக புங்கமரம் உள்ளது, அங்கு குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி வரைபடத்தில் ஒரு கோயில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. நான் பார்வை மகஜரில் எத்தனையாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் 2வது சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வைமகஜர் சம்மந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் விசாரணையின்போது வாக்குமூலம் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. பார்வை மகஜர் சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், அ.சா.1 சொல்லி கொடுத்து தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1க்கு ஆதரவாக தான் நான்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை, சண்டை நடந்தது எனக்கு தெரியாது, கையொப்பம் மட்டும் செய்தேன். பார்வை மகஜர் என் முன்பாக தயார் செய்யவில்லை என்றாலும், அதில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 டன் தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் இல்லை. என்னை இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2025.10.10 12:26:43 +0530